## பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்கள் இலங்கைக்கான விஜயத்தினை நிறைவுசெய்கின்றனர்

உடனடி வெளியீட்டிற்காக

பணிக்குழு வருகையின் பின்னரான பத்திரிகை வெளியீடுகள் நாடொன்றிற்கான விஜயமொன்றினைத் தொடர்ந்து பூர்வாங்கக் கண்டறிகைகளைத் தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுக்களின் அறிக்கைகளை உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவேண்டும் என்ற அவசியமில்லை. இப்பணிக்குழு சபைக் கலந்துரையாடலுக்கு வழிவகுக்காது.

- *இலங்கை அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புக்கள் தொடர்ச்சியாக மூன்று காலாண்டுகளில் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, குறைந்தளவிலான பணவீக்கம், அதிகரித்த அரசிறைச் சேகரிப்பு மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளின் கட்டியெழுப்பல் என்பவற்றுடன் மீட்சிக்கான ஆதரவினைத் தொடர்ந்துள்ளன.*

- *சகல இலங்கை மக்களுக்கும் நன்மையளிக்கின்ற விதத்தில் பரந்த அடிப்படையிலான மற்றும் உறுதியான பொருளாதார மீட்சியொன்றினை நிச்சயப்படுத்தும் பொருட்டு மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரல் குறித்த தீர்க்கமான முன்னேற்றம் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது.*

- *பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான முக்கிய கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காணப்படுகின்ற முன்னேற்றமானது விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் மூன்றாவது மீளாய்வின் பின்னணியில் முறையாக மதிப்பிடப்படும்.*

**கொழும்பு, இலங்கை – 2024 ஓகத்து 2:** பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்படுகின்ற அதிகாரிகளின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான அண்மைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் என்பன தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சிரேஷ்ட பணிக்குழுத் தலைவர் திரு. பீற்றர் புரூவர் தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிக்குழுவொன்று 2024 யூலை 25 தொடக்கம் ஓகத்து 2 வரை இலங்கைக்கு விஜயம் செய்தது.

பணிக்குழு மேற்கொண்ட விஜயத்தின் இறுதியில் திரு. புரூவர் பின்வரும் அறிக்கையினை வெளியிட்டார்:

‘‘இலங்கை அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது பாராட்டத்தக்க பெறுபேறுகளை விளைவிக்கின்றது. தொடர்ச்சியாக மூன்று காலாண்டுகளைக் கொண்ட விரிவாக்கமொன்றினைத் தோற்றுவித்துள்ள உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் 2024இன் முதலாவது காலாண்டில் 5.3 சதவீதத்திற்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் துரிதமடைந்த வளர்ச்சி என்பவற்றுடன் மீட்சியானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. பணவீக்கமானது இலங்கை மத்திய வங்கியின் 5 சதவீத இலக்கிற்குக் கீழாகத் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்நாட்டுக் கடன்பாட்டு வீதங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2024இன் முதலாவது அரையாண்டுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் பெறுமதியினால் அதிகரித்து, ஐ.அ.டொலர் 5.6 பில்லியன் தொகையினை எட்டின. அதே காலப்பகுதியில் அரசிறைச் சேகரிப்புக்கள் அதிகரித்தன. முன்னோக்கிச் செல்கையில், இம்மேம்பாடுகள் சகல இலங்கை மக்களுக்குமான சிறந்த வாழ்க்கை நிலைமைகளாக மாற்றப்படுவதற்கான தேவை காணப்படுகின்றது.

‘‘முக்கியமானதொரு தருணத்தில் இலங்கையின் நிச்சயமற்றதன்மையினைக் கொண்டுள்ள மீட்சியுடன், மறுசீரமைப்பு உத்வேகத்தினை நிலைபெறச்செய்தல் மற்றும் சகல நிகழ்ச்சித்திட்ட அர்ப்பணிப்புக்களினதும் காலந்தவறாத நடைமுறைப்படுத்தலினை நிச்சயப்படுத்தல் என்பன இதுவரையான காலப்பகுதியில் கடின

உழைப்பினால் வென்றெடுத்த பொருளாதார முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கும் திடமான தளமொன்றில் பொருளாதாரத்தினை இடம்பெறச்செய்வதற்கும் இன்றியமையாதனவாகத் திகழ்கின்றன. பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை மீட்டெடுத்தல் என்பன அரசிறையை மேலும் அதிகரிப்பதற்கான முயற்சிகளைத் தேவைப்படுத்துகின்றன. 2025 வரவு செலவுத்திட்டமானது பொருத்தமான அரசிறை வழிமுறைகளினால் துணைபுரியப்பட்டு, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவீதம் கொண்ட ஆரம்ப மீதி இலக்கினை அடையும் பொருட்டு செலவிடல் கட்டுப்பாட்டினைத் தொடர வேண்டுமென்பதுடன் இது இலங்கையின் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை மீட்டெடுப்பதற்கு முக்கியமானதொரு தேவைப்பாடாகக் காணப்படுகின்றது. உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் திட்டமிடப்பட்ட தளர்வு 2025இல் அரசிறைத் திரட்சிக்கு ஆதரவளிக்கும். வரி நிர்வாக மறுசீரமைப்புக்கள் 2025 ஏப்பிறல் மாதமளவில் ஏற்றுமதியாளர்களுக்கான முறையாகத் தொழிற்படுகின்ற பெறுமதிசேர் வரி மீளளிப்பு முறைமையொன்றினைத் தாபித்தல் உள்ளடங்கலாக இணங்குவிப்பினை மேலும் மேம்படுத்தக்கூடும். இறை நிலையை நலிவடையச்செய்யும் எந்தவொரு முன்மொழியப்பட்ட நடவடிக்கையும் உயர் தரமான ஈடுசெய்யும் நடவடிக்கைகளின் மூலம் எதிரீடுசெய்யப்படவேண்டும். புதிய வரி விலக்களிப்புக்களைத் தவிர்த்தலானது ஊழல் இடர்நேர்வுகளையும் அரசிறைக் கசிவுகளையும் குறைப்பதனை மாத்திரமன்றி பெருமளவு ஊகிக்கக்கூடியதும் வெளிப்படையானதுமான வரி முறைமையொன்றினையும் நிச்சயப்படுத்தும். செலவு மீட்சி மட்டங்களில் வலு விலையிடலைத் தொடர்ந்தும் பேணுவதானது சாத்தியப்பாடான இறைச் செலவுகளைத் தவிர்ப்பதற்கு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. மேம்பட்ட இலக்கிடல் மற்றும் சிறந்த பண மாற்றல்களின் உள்ளடக்கம் என்பனவூடாக வறுமையிலுள்ளவர்களையும் பாதிக்கப்படக்கூடியவர்களையும் பாதுகாப்பதானது முக்கியமானதாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. கொள்கை நழுவல்கள் மீட்சியினைப் பாதிப்பிற்குட்படுத்தக்கூடும்.

‘‘பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டம் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் ஆகிய இரு முக்கிய சட்டவாக்கங்களுக்கான அண்மைய பாராளுமன்ற ஒப்புதலானது இறை ஒழுக்கவியலையும் முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்தி, வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்புக்கூறும்தன்மையினையும் வலுப்படுத்துவதற்கான மைல்கல்லொன்றாகக் காணப்படுகின்றது. முழுமையான படுகடன் முகாமைத்துவ உபாயமொன்றினை உருவாக்குதல் மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவக் காரியாலயமொன்றினைத் தாபித்தல் என்பன அரசாங்கத்தின் நிதியிடல் இடர்நேர்வுகளைக் குறைக்கத் துணைபுரியும்.

‘‘பணவீக்கம் நன்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாணயக் கொள்கையானது முன்மதியுடையதாகவும் பணவீக்க எதிர்பார்க்கைகளின் நிலைநிறுத்தலிற்கு முன்னுரிமையளிப்பதாகவும் தொடர்ந்தும் காணப்பட வேண்டும். விலை உறுதிப்பாட்டினைப் பேணுவது இலங்கை மத்திய வங்கியின் சுயநிர்ணயத்தினைப் பாதுகாப்பதிலும் தங்கியுள்ளது. தொடர்ச்சியான ஒதுக்குத் திரட்சி மற்றும் செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மை என்பன முக்கிய முன்னுரிமைகளாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

‘‘வங்கித்தொழில் சட்டத்திற்கான அண்மைய சீர்திருத்தங்கள் மற்றும் தொடர்புடைய புதிய நடைமுறைப்படுத்தல் ஒழுங்குமுறைகள் என்பன நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்குத் துணைபுரியும். நிதியியல் துறையானது பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்க அனுமதிப்பதற்கு வங்கித்தொழில் துறை போதியளவு மூலதனவாக்கப்படுதலை அதிகாரிகள் உறுதிசெய்யும் தேவைப்பாடு உள்ளது.

‘‘அதிகாரிகளின் முன்னைய ஆளுகை நடவடிக்கைத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் அண்மையில் உருவாக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு தேசிய நிகழ்ச்சிநிரலானது வரவேற்கத்தக்க படிமுறையொன்றாகும். விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான அண்மைய கால கடமைப்பொறுப்புக்களை முன்னுரிமைப்படுத்தி, ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஆளுகை மறுசீரமைப்புக்களின் உறுதியான நடைமுறைப்படுத்தலானது ஊழல் இடர்நேர்வுகளை நிவர்த்தி செய்வதற்கும் கடந்தகாலத்தின் தவறான கொள்கைப் படிமுறைகளிலிருந்தான விலகலொன்றினை ஊக்குவிப்பதற்கும் இன்றியமையாததொன்றாகும். பொதுமக்கள் நம்பிக்கையினை வலுப்படுத்துவதற்கும் இம்முக்கிய முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலினை வசதிப்படுத்துவதற்கும் ஆளுகை மறுசீரமைப்புக்களை இயலச்செய்கின்ற சூழலொன்றினை நிச்சயப்படுத்துவதானது முக்கியமானதொன்றாகும்.

‘‘படுகடனை நீடித்துநிலைபெறத்தக்க பாதையொன்றில் இடம்பெறச்செய்வதன் மூலம் பாராட்டத்தக்க முன்னேற்றத்தினை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் நிறைவேற்றம் மற்றும் உத்தியோகபூர்வ கொடுகடன் வழங்குநர் குழு மற்றும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி என்பவற்றுடனான உடன்படிக்கைகளை இறுதிப்படுத்தல் என்பன முக்கிய மைல்கற்கலாகும். முறி உடமையாளர் குழுவுடன் மேற்கொள்ளப்பட்ட வரையறுக்கப்பட்ட கலந்துரையாடல்களின் இரண்டாவது சுற்றின் முடிவில் அறிவிக்கப்பட்ட ‘‘கூட்டாகப் பணிபுரிகின்ற கட்டமைப்பினைப்’’ பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்கள் மதிப்பீடு செய்ததுடன் இம்மதிப்பீட்டினை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதுடன் அவர்களின் வேண்டுகோளின் பேரில் முறி உடமையாளர்களின் நிதியியல் ஆலோசகர்களுக்கும் வழங்கியுள்ளனர். படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினை அடைவதற்கும் முதலீட்டாளர் நம்பிக்கையினை மீளப்பெறுவதற்கும் எஞ்சியுள்ள படிமுறைகளின் துரிதமான தீர்மானமொன்றினை ஊக்குவிக்கின்றோம். இலங்கையின் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகளிற்கு நாம் தொடர்ந்தும் ஆதரவளிப்போம்.

‘‘பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான முக்கிய கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காணப்படுகின்ற முன்னேற்றமானது விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் மூன்றாவது மீளாய்வின் பின்னணியில் முறையாக மதிப்பிடப்படும். மூன்றாவது மீளாய்வின் காலப்பகுதியானது அண்மையில் அறிவிக்கப்பட்ட சனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படும்.

‘‘பன்னாட்டு நாணய நிதியக் குழுவானது சனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரிக்கான செயலாளர் திரு. கே. எம். மஹிந்த சிறிவர்த்தன மற்றும் ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் ஆகியோருடன் கூட்டங்களை நடாத்தியது. பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் பன்னாட்டு நாணய நிதியக் குழு சந்தித்தது.

‘‘விஜயத்தின் போதான உன்னதமான ஒத்துழைப்பிற்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றி கூறிக்கொள்வதுடன் முழுமையான மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய பொருளாதார மீட்சியொன்றிற்காக இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது அர்ப்பணிப்பினையும் மீள்உறுதிப்படுத்துகின்றோம்.’’